முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்

| | |
|---|---|
| எஸ்.சி.எண்.192/2023 | அ.த.சா.16 |
| பெயர்: ஜெயராணி | வேலை: |
| தகப்பனார் பெயர்: | மதம்: |
| கிராமம்: | வயது: |
| தாலுகா: | நாள்:15.06.2026. |

1872 ம் ஆண்டின் இந்திய சாட்சியச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை :–

நான் தற்போது உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.08.2022 ம் தேதி நான் வடமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது உத்தரவின்படி எரியோடு காவல் நிலைய கு.எண்.184/2022 வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று 6.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிரபாகரன், கருப்பசாமி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அதசாஆ.13. மாதிரி வரைபடம் அதசாஆ.14. பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே 7.20 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து இரத்தம்பட்ட மண் கொஞ்சம், இரத்தம்படாத மண் சிறிதளவை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அதசாஆ.15. இரத்தம்பட்ட மண் கொஞ்சம் இரத்தம்படாத மண் சிறிதளவு முறையே சாபொ.1 மற்றும் 2. பின்னர் பிரேதத்தை எரியோடு முதல்நிலை காவலர் 811 ராஜா என்பவர் மூலம் வேடசந்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். வேடசந்தூர் அரசு மருத்துவமனையின்

சவக்கிடங்கில் இருந்த பிரேதத்தை மகாலை 9.30 மணிக்கு பார்வையிட்டு பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயாரித்தேன். அந்த அறிக்கை அதசாஆ.16. 11 மணிக்கு பிரேத விசாரணை முடித்து பஞ்சாயத்து சாட்சிகள் மாரியப்பன், முருகேசன், ரவிச்சந்திரன், சுப்ரமணி, ராதாகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்தேன். பின்னர் 11.30 மணிக்கு இறந்த மருதையின் இறப்பின் மருத்துவ காரணம் அறியும்பொருட்டு தலை துண்டிக்கப்பட்ட பிரேதம் மற்றும், துண்டிக்கப்பட்ட தலை ஆகியவற்றை பிரேத பரிசோதனைக்காக எரியோடு காவல்நிலைய முதல்நிலை காவலர் 811 திரு ராஜா என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் அதசாஆ.17. பின்னர் சாட்சிகள் ரவி, முருகேசன், வரதராஜன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் 13 மணிக்கு எதிரியை தேடிச்சென்று எரியோடு–அய்யலூர் பெருமாள் கோவில் அருகே இருந்த எதிரி சக்திவேலை சாட்சிகள் சம்பு, கார்த்தி ஆகியோர்கள் அடையாளம் காட்ட எதிரியை கைது செய்து விசாரிக்க அவர் தானாக முன்வந்து 3.15 மணிக்கு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியை அவருடைய வீட்டிற்கு அழைத்துச்சென்றபோது அவர் தாழ்வாரத்தில் மறைத்து வைத்திருந்த சம்பவ சமயத்தில் உடுத்தியிருந்த இரத்தக்கறைபடிந்த முழுக்கைச் சட்டை ஒன்று, இரத்தக்கறைபடிந்த கருப்பு கலர் வேஷ்டி ஒன்று, இரத்தக்கறைபடிந்த சுமார் 34 செ.மீ. நீளமுள்ள குழாய் வடிவ கைப்பிடியுடன் கூடிய அருவாள் ஒன்று அத்தாட்சியில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.18. அத்தாட்சி அதசாஆ.19, இரத்தக்கறைபடிந்த முழுக்கைச் சட்டை ஒன்று, இரத்தக்கறைபடிந்த கருப்பு கலர் வேஷ்டி ஒன்று, இரத்தக்கறைபடிந்த சுமார் 34 செ.மீ. நீளமுள்ள குழாய் வடிவ கைப்பிடியுடன் கூடிய அருவாள் ஒன்று முறையே

சாபொ.3 முதல் 5 ஆகும். பின்னர் எதிரியை 16 மணிக்கு நிலையம் அழைத்து வந்து திரேகப்பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்து பின்னர் நீதிமன்றக்காவலுக்கு அனுப்பிவைத்தேன். அதன் பின்பு 28.08.2022ம் தேதி வழக்கின் மேல்விசாரணையை எரியோடு காவல் ஆய்வாளர் திருமதி.சத்திய பிரபா எடுத்துக்கொண்டு சாட்சிகள் ஈஸ்வரன், சுப்புலட்சுமி, மருதை, மல்லிகா, அன்னலட்சுமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் கைப்பற்றிய தடயத்தினை அவர் பகுப்பாய்வுக்காக தடய அறிவியல் துறை மதுரை ஆய்வகத்திற்கு அனுப்பியுள்ளார். அதன் பின்பு 12.12.2022ம் தேதி வழக்கின் மேல்விசாரணையை மீண்டும் நான் எடுத்துக்கொண்டு பிரேத பரிசோதனை செய்த இரண்டு மருத்துவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத கூராய்வு அறிக்கை பெற்றேன். மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் அதசாஆ.20. பிரேத கூராய்வு அறிக்கை அதசாஆ.21. தடய அறிவியல் ஆய்வகத்திற்கு தடயங்களை அனுப்பியதற்காக வேண்டுகோள் கடிதம் அதசாஆ.22. உள்ளுறுப்பு அறிக்கை அதசாஆ.23. உயிரியல் அறிக்கை அதசாஆ.24. குருதிவடிநீரியல் அறிக்கை அதசாஆ.25. தடய அறிவியல் துறை அலுவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனையின் போது இறந்தவரின் உடலில் இருந்து கைப்பற்றப்பட்ட இரத்தக்கறைபடிந்த ஊதா கலர் ஜட்டி ஒன்று சாபொ.6. கட்டம்போட்ட கைலி ஒன்று சாபொ.7. பின்னர் 12.12.2022ம் தேதி புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன்.

புலன் விசாரணையின்போது அசா1 முதல் 14 சாட்சிகள் எதிரியையும் குற்ற சம்பவத்தையும் இணைத்து வாக்குமூலத்தில் கூறியுள்ளார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்து சுமார் 1.30 மணி நேரம் கழித்து புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகார் எங்கு வைத்து யாரால் எழுதப்பட்டது என்று எனக்கு

தெரியாது. எந்த நேரத்தில் மருதை வெட்டுப்பட்டார் என்று புகாரில் குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தை நேரடியாக கண்ணுற்ற சாட்சிகள் யாரும் கிடையாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் எங்கள் காவல்நிலையத்தை பொறுத்த மட்டில் Block spot என்றால் சரிதான். அதனால் அங்கே காவல்துறையினர் ரோந்து தீவிரமாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்திற்கு பின்புறம் மதுபானக்கடை உள்ளது என்றால் சரிதான். அன்றைய தேதியில் பீட் பணியில் இருந்த அலுவலரை விசாரித்து நான் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. திண்டுக்கல்–கரூர் ரோட்டில் எரியோடு உள்ளது என்றால் சரிதான். கரிக்காலி என்ற இடத்தில் சிமிண்ட் தொழிற்சாலை உள்ளது என்றால் சரிதான். அங்கு வேலைக்காக வெளிமாநில நபர்கள் வந்து செல்வது உண்டு என்றால் சரிதான். எரியோடு பகுதியில் மனநிலை பாதிக்கப்பட்ட நபர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. இடப்பிரச்சனை சம்மந்தமாக வருவாய்த்துறை அலுவலர்களை விசாரித்து ஆவணங்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட தடயங்களை பகுப்பாய்வுக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றிய அருவாளில் எதிரியின் கைரேகை பதிந்துள்ளதா என்பது குறித்து கைரேகை நிபுணருக்கு அதை அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன நாளில், நேரத்தில், இடத்தில் விதத்தில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றும், எதிரியை கைது செய்யவில்லை என்றும், அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் தடயம் எதுவும் நான் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையான குற்றவாளியை கண்டுபிடிக்காமல் தவறுதலாக எதிரியை இந்த

வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.06.15 17:17:06 +0530

Principal District Judge,
Dindigul.